# வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த பொதுக்கூட்ட அறிக்கை ஏப்ரல் 2022.04.21

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்திற்கான மாதாந்த பொதுக்கூட்டம் கௌரவ தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் 2022.04.21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 09.46 மணிக்கு தலைமையலுவலக சபா மண்டபத்தில் ஒரு நிமிட அக வணக்கத்துடன் ஆரம்பமானது. அவ்வேளை கீழ்க்காணும் அங்கத்தவர்கள் சமூகமாகியிருந்தனர்.

1. கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி
2. கௌரவ உறுப்பினர் இராமன் சேனாதிராசா
3. கௌரவ உறுப்பினர் நாகலிங்கம் இரத்தினபூபதி
4. கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா
5. கௌரவ உறுப்பினர் சுப்பையா பத்மநாதன்
6. கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா
7. கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம்
8. கௌரவ உபதவிசாளர் பொன்னம்பலம் இராசேந்திரம்
9. கௌரவ உறுப்பினர் சுப்பிரமணியம் சர்வேஸ்வரன்
10. கௌரவ உறுப்பினர் சரவணமுத்து தனபாலசிங்கம்
11. கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன்
12. கௌரவ உறுப்பினர் சந்திரகுமார் ரஜனிதேவி
13. கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன்
14. கௌரவ உறுப்பினர் கந்தையா ஜினதாஸ்
15. கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன்
16. கௌரவ உறுப்பினர் சசிகலாதேவி ரவி
17. கௌரவ உறுப்பினர் கெங்காசுதன் பிரதீபன்
18. கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஜெயபாலசிங்கம்
19. கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா
20. கௌரவ உறுப்பினர் சொக்கலிங்கம் சபேசன்
21. கௌரவ உறுப்பினர் மரியதாசன் ஜோசெப் இதயராஜ்
22. கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை
23. கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன்
24. கௌரவ உறுப்பினர் ஐயாத்துரை மயூரன்
25. கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ்
26. கௌரவ உறுப்பினர் சிவகுமாரன் செந்தூரன்
27. கௌரவ உறுப்பினர் சுபாஸ்கரன் சந்திரமதி
28. கௌரவ உறுப்பினர் மேரி ஆன் சகாயராணி குவேந்திரராசா
29. கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன்
30. கௌரவ உறுப்பினர் அனுஷாவதி இதயதாஸ்
31. கௌரவ உறுப்பினர் சுபத்திரா ஜெயசீலன்
32. கௌரவ உறுப்பினர் மார்க்கண்டு மகாதேவா
33. கௌரவ உறுப்பினர் சேனாதிராசா கலையமுதன்

- கௌரவ தவிசாளர் அவர்கள் தனது தலைமை உரையிலே இன்றைய 48 வது கூட்டத்திற்கு வருகை தந்திருக்கின்ற கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், சபையின் பதில் செயலாளர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவரையும் வரவேற்று தனது காலை வணக்கத்தை தெரிவித்துக் கொண்டார்.

- தொடர்ந்து கௌரவ உறுப்பினர் பாக்கியநாதர் மரியதாஸ் அவர்கள் சுகயீனம் காரணமாக கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியாதுள்ளதாக அறியத் தந்துள்ளார்கள் எனக் கூறி அவரது விடுமுறையினை அனுமதிப்பதற்கு கௌரவ தவிசாளர் சபைக்குச் சமர்ப்பித்தார்.

- கௌரவ உறுப்பினர் பாக்கியநாதர் மரியதாஸ் அவர்களின் விடுமுறையினை அனுமதிக்கலாமென கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்கள் தனது தலைமையுரையிலே நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளது. இதனால் பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் எமது அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதில் சிக்கல்கள் காணப்படுகின்ற போதும் சபையின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல ஒத்துழைப்பு வழங்கி வருகின்ற கௌரவ உப தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் நன்றிகள் எனத் தெரிவித்தார்.

  - தொடர்ந்து நிகழ்ச்சி நிரல் அடிப்படையில் 16.03.2022 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கையை அங்கீகரிக்குமாறு கௌரவ தவிசாளர் அவர்களினால் கோரப்பட்டது.

- மார்ச் மாதம் 16.03.2022 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக்கூட்ட வரைபு அறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

  - ❖ கௌரவ உறுப்பினர் சண்முகலிங்கம் சஜீவன் அவர்கள் காலை 09.55 மணிக்கு வருகை தந்தார்.

- ➢ அடுத்து 24.03.2022, 07.04.2022, 21.04.2022 ஆம் திகதிகளில் நடைபெற்ற நிதிக்குழுக் கூட்டங்களின் சிபாரிசிற்கமைய கொடுப்பனவுகள் விபரம் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | Jana Civil Work, Imayanan, Uduppiddy | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் சந்தை மற்றும் இறைச்சிக்கடைகள் அமைத்தல், காங்கேசன்துறை மத்தி வேலைத்திட்டத்திற்கான இரண்டாவது பகுதிக் கொடுப்பனவு | Rs 5,339,067.60 |
| 02 | வித்தகன் சனசமூக நிலையம், வித்தகபுரம் | Council -2021 நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Renovation of Keerimalai Kerny Phase-V வேலைக்குரிய முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,998,531.70 |
| 03 | SAI RAM Trade Center, Thellippalai | மயிலிட்டி உப அலுவலகத்தின் நீர்ப்பொருத்து உபகரணங்கள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 107,320.00 |
| 04 | Metropolitan Technologies (Pvt) Ltd | Canon Toner 052 கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 149,310.00 |
| 05 | Nalin Information Technologies, Thirunelvely | Computer – 03 கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 520,500.00 |
| 06 | All Ceylon Distributors, Jaffna | காகிதாதிகள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 137,600.00 |
| 07 | D.R.Industries(PVT) LTD, Palaly Rd, Jaffna | அலுவலகப்பாவனைக்கு Chair கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 348,521.25 |
| 08 | RK electricals | வீதி விளக்கு கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 397,500.00 |
| 09 | Alpha industries PVT Ltd. | Library cupboard 0.6mm கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 134,665.20 |
| 10 | Alpha industries PVT Ltd. | Library cupboard 0.7mm கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 276,922.80 |
| 11 | Thurkka Multi Center, K.K.S Road, Mallakam. | சபையின் பாவனைக்கு 100 Ream A4 Paper கொள்ளவனவு செய்தமைக்கான கொடுப்பனவு | RS.280,000.00 |

**தீர்மான இல: 01/21.04.2022**

| இல | பெயர் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 01 | Jana Civil Work, Imayanan, Uduppiddy | பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் சந்தை மற்றும் இறைச்சிக்கடைகள் அமைத்தல், காங்கேசன்துறை மத்தி வேலைத்திட்டத்திற்கான இரண்டாவது பகுதிக் கொடுப்பனவு | Rs 5,339,067.60 |
| 02 | வித்தகன் சனசமூக நிலையம், வித்தகபுரம் | Council -2021 நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட Renovation of Keerimalai Kerny Phase-V வேலைக்குரிய முதலாவதும் இறுதியுமான கொடுப்பனவு | Rs 1,998,531.70 |

| | | | |
|---|---|---|---|
| 03 | SAI RAM Trade Center, Thellippalai | மயிலிட்டி உப அலுவலகத்தின் நீர்ப்பொருத்து உபகரணங்கள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 107,320.00 |
| 04 | Metropolitan Technologies (Pvt) Ltd | Canon Toner 052 கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 149,310.00 |
| 05 | Nalin Information Technologies, Thirunelvely | Computer – 03 கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 520,500.00 |
| 06 | All Ceylon Distributors, Jaffna | காகிதாதிகள் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 137,600.00 |
| 07 | D.R.Industries(PVT) LTD, Palaly Rd, Jaffna | அலுவலகப்பாவனைக்கு Chair கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 348,521.25 |
| 08 | RK electricals | வீதி விளக்கு கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 397,500.00 |
| 09 | Alpha industries PVT Ltd. | Library cupboard 0.6mm கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 134,665.20 |
| 10 | Alpha industries PVT Ltd. | Library cupboard 0.7mm கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | Rs 276,922.80 |
| 11 | Thurkka Multi Center, K.K.S Road, Mallakam. | சபையின் பாவனைக்கு 100 Ream A4 Paper கொள்ளவனவு செய்தமைக்கான கொடுப்பனவு | RS.280,000.00 |

மேற்படி கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் கந்தையா ஜினதாஸ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதி (PSDG-2022) மூலம் வீதிவிளக்குகள் பொருத்துவதற்காக ரூபா 500,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. குறிப்பிட்ட செயற்றிட்டத்தினை மேற்கொள்வதற்கான சபையின் தழுவு அங்கீகாரத்திற்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 02/21.04.2022**

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதி (PSDG-2022) மூலம் வீதிவிளக்குகள் பொருத்துவதற்காக ரூபா 500,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. குறிப்பிட்ட செயற்றிட்டத்தினை மேற்கொள்வதற்கான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் குறித்த வீதி விளக்குகள் பொருத்தப்படும் வீதிகளின் விபரங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் வீதி விளக்குகள் மீள்குடியேற்றப் பிரதேசங்களுக்கே பொருத்தப்படும் எனத் தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர் சிவபாலசுந்தரம் ஹரிகரன் அவர்கள் காலை 10.15 மணிக்கு வருகை தந்தார்.

- மயிலிட்டி உப அலுவலகத்திற்குட்பட்ட பிரதேச ஆதனங்களின் ஆதனவரியை மீள்மதிப்பீட்டிற்கு அமைய 01.07.2022 ஆம் திகதி முதல் 10% ஆக அறவிடுவதற்கு சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 03/21.04.2022**

மயிலிட்டி உப அலுவலகத்திற்குட்பட்ட பிரதேச ஆதனங்களின் ஆதனவரியை மீள்மதிப்பீட்டிற்கு அமைய 01.07.2022 ஆம் திகதி முதல் 10% ஆக அறவிடுவதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- நூலகத்திற்கு வருகை தருகின்ற வாசகர்களின் நன்மை கருதியும் நூலக சேவையினை விரிவுபடுத்தும் நோக்கிலும் எமது சபையின் கீழ் இயங்குகின்ற அளவெட்டி, தெல்லிப்பழை, மயிலிட்டி, காங்கேசன்துறை பொதுநூலகங்களுக்கு போட்டோ கொப்பி இயந்திரங்களை கொள்வனவு செய்து வழங்குவது தொடர்பான சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன் மூலம் ஒருபகுதி வருமானத்தையும் பெற்றுக்கொள்வதன் மூலம் மேலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

**தீர்மான இல :- 04/21.04.2022**
நூலகத்திற்கு வருகை தருகின்ற வாசகர்களின் நன்மை கருதியும் நூலக சேவையினை விரிவுபடுத்தும் நோக்கிலும் எமது சபையின் கீழ் இயங்குகின்ற அளவெட்டி, தெல்லிப்பழை, மயிலிட்டி, காங்கேசன்துறை பொதுநூலகங்களுக்கு போட்டோ கொப்பி இயந்திரங்களை கொள்வனவு செய்து வழங்குவது தொடர்பான அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் மார்க்கண்டு மகாதேவா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் நாட்டின் தற்போதைய #ழ்நிலையில் நிழற்பிரதி இயந்திரங்களின் இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமையால் விலை அதிகரித்து காணப்படுகின்றது. காகிதங்களின் விலையும் அதிகரித்துள்ளது. இவற்றின் கொள்வனவிற்கு பெருமளவு செலவினம் ஏற்படும். இச்சந்தர்ப்பத்தில் நிழற்பிரதி இயந்திரங்களின் கொள்வனவு அவசியமானதா? இதன் மூலம் வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியுமா? என வினாவினார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் எதிர்காலத்தில் விலை இன்னும் அதிகரிக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதுடன் இது மாணவர்களின் கல்விக்கு சேவையாக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடே தவிர வருமானத்தை பெறும் நோக்கத்திற்கானது அல்ல எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் தெல்லிப்பழை பொது நூலகத்தின் ஆலோசனைக் கூட்டத்தில் மக்கள் தமது பிள்ளைகள் நூலகப்புத்தகங்களில் தேவையான பக்கங்களின் பிரதிகளை பெற்றுக் கொள்வதற்கு நூலகத்தில் நிழற்பிரதி இயந்திரம் இருப்பது அவசியம் என கோரிக்கை முன்வைத்துள்ளனர். இது மாணவர்களுக்கான சேவை எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் சின்னத்தம்பி ஜெயரத்தினம் அவர்கள் பல வீதிகள் உடைந்த நிலையில் உள்ளது. பலாலி மயான வீதி உடைந்து காணப்படுகின்றது. வீதி திருத்தங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் சேனாதிராசா கலையமுதன் அவர்கள் வசாவிளான் வீதியின் இருமருங்கிலும் shoulder போடப்படாமையால் வீதி பழுதடைந்துள்ளது எனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் கனரக வாகனங்கள் அதிகமான சுமையுடன் இவ்வீதியூடாக பயணிப்பதால் வீதி பழுதடைகின்றது எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் கெங்காசுதன் பிரதீபன் அவர்கள் தற்போது பாடசாலைகளில் மாணவர்களுக்கு கற்றல் செயற்பாடுகளுக்கு வசதி வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றது எனத் தெரிவித்தார்.
- கௌரவ தவிசாளர் அவர்கள் எல்லா மாணவர்களிடமும் இணையவசதி கொண்ட தொலைபேசி இல்லை எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் மார்கண்டு மகாதேவா அவர்கள் வருமானத்திற்கு முக்கியத்துவம் வழங்காமல் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

➢ எமது சபையால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கும் நோக்கில் மீளமைக்கப்பட்ட மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டம் - 2022 இனை தயாரிப்பதற்கு சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 05/21.04.2022**
எமது சபையால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கும் நோக்கில் மீளமைக்கப்பட்ட மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டம் - 2022 இனை தயாரிப்பதற்கு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

❖ கௌரவ உறுப்பினர் பொன்னம்பலம் ஆதவன் அவர்கள் காலை 10.31 மணிக்கு வருகை தந்தார்.

➢ தொழில்நுட்பவியல் கல்லூரி- யாழ்ப்பாணத்தில் National Certificate in Engineering Draughtsmanship கற்கைநெறியினை தொடர்கின்ற செல்வி.உ.மோவிதா அவர்களும், உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - யாழ்ப்பாணத்தில் Higher National Diploma in Management

கற்கைநெறியினை தொடர்கின்ற செல்வி.அ.ஜாமினி அவர்களும் ஆறு மாத காலத்திற்கு எமது சபையில் பயிற்சி பெறுவதற்கு கோரிக்கை கடிதங்கள் சமர்ப்பித்துள்ளனர். அவர்களை 09.05.2022 இலிருந்து 08.11.2022 வரையான ஆறு மாத காலப்பகுதிக்கு எமது சபையில் பயிற்சியாளர்களாக இணைத்துக் கொள்வதற்கும் சபை நிதி மூலம் நாளாந்தம் ரூபா 500 கொடுப்பனவு வழங்குவதற்கும் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 06/21.04.2022**

தொழில்நுட்பவியல் கல்லூரி- யாழ்ப்பாணத்தில் National Certificate in Engineering Draughtsmanship கற்கைநெறியினை தொடர்கின்ற செல்வி.உ.மோவிதா அவர்களும், உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - யாழ்ப்பாணத்தில் Higher National Diploma in Management கற்கைநெறியினை தொடர்கின்ற செல்வி.அ.ஜாமினி அவர்களும் ஆறு மாத காலத்திற்கு எமது சபையில் பயிற்சி பெறுவதற்கு கோரிக்கை கடிதங்கள் சமர்ப்பித்துள்ளனர். அவர்களை 09.05.2022 ஆந் திகதியிலிருந்து 08.11.2022 ஆந் திகதி வரையான ஆறு மாத காலப்பகுதிக்கு எமது சபையில் பயிற்சியாளர்களாக இணைத்துக் கொள்வதற்கும் சபை நிதி மூலம் நாளாந்தம் ரூபா 500 கொடுப்பனவு வழங்குவதற்கும் அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் நாகலிங்கம் இரத்தினபூபதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- எமது சபையின் செயலாளர் திரு.இ.பகீரதன் அவர்கள் விபத்து நடைபெற்று சுகயீன விடுமுறை பெற்றிருப்பதனால் 18.04.2022 ஆந் திகதி முதல் பதில் செயலாளரான திரு.சு.சுதர்ஜன்-செயலாளர், நல்லூர் பிரதேச சபை அவர்களினை எமது சபையின் நடைமுறை கணக்குகள் 7573141, 7573232 என்பவற்றிற்கு காசோலையில் முதலாவது கையொப்பதாரராக கையொப்பம் இடுவதற்கான சபையின் தழுவு அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 07/21.04.2022**

எமது சபையின் செயலாளர் திரு.இ.பகீரதன் அவர்கள் விபத்து நடைபெற்று சுகயீன விடுமுறை பெற்றிருப்பதனால் 18.04.2022 ஆந் திகதி முதல் பதில் செயலாளரான திரு.சு.சுதர்ஜன்-செயலாளர், நல்லூர் பிரதேச சபை அவர்களினை எமது சபையின் நடைமுறை கணக்குகள் 7573141, 7573232 என்பவற்றிற்கு காசோலையில் முதலாவது கையொப்பதாரராக கையொப்பம் இடுவதற்கான தழுவு அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் கெங்காசுதன் பிரதீபன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- எமது சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் விசேட தேவையுடைய பொதுமக்களிற்கு அவர்களின் ஆதனங்களுக்கு ஆதனவரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பு வழங்குவதற்கான சபையின் அனுமதிக்கு கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**தீர்மான இல :- 08/21.04.2022**

எமது சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் விசேட தேவையுடைய பொதுமக்களிற்கு அவர்களின் ஆதனங்களுக்கு ஆதனவரி, வியாபார உரிமம் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பு வழங்குவதற்கான அனுமதி வழங்குவதென கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் டானியேல் அந்தோனிப்பிள்ளை அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- கௌரவ தவிசாளர் அவர்கள் எமது பண்பாடு, கலாசாரத்தினை பேணும் விதமாக சபையில் கலாசார பண்பாட்டுக்குழுவினை அமைத்து தமிழ் விழா, ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தில் கலைநிகழ்வுகள் போன்றவற்றை பாடசாலை மாணவர்களின் பங்குபற்றலுடன் நடாத்தலாம். இந்நிலையியற்குழுக்களில் பொதுமக்களில் சிறப்புத்தேர்ச்சி உள்ளவர்களையும் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்காக உள்வாங்க முடியும் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் சுபத்திரா ஜெயசீலன் அவர்கள் இக்குழுவை அமைப்பது சிறப்பான விடயம் எனத் தெரிவித்தார்.
- கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் இக்குழுவின் செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இவ்விடயம் பரிசீலிக்கப்பட்டு பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல: 09/21.04.2022**
கலாசாரப்பண்பாட்டுக்குழு உறுப்பினர்களாக பின்வரும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

**கலாசாரப்பண்பாட்டுக்குழு உறுப்பினர்கள்**

1. கௌரவ உறுப்பினர் மரியதாசன் யோசெப் இதயராஜ்
2. கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன்
3. கௌரவ உறுப்பினர் சிவபாலசுந்தரம் ஹரிகரன்
4. கௌரவ உறுப்பினர் தாயுமானவர் நிகேதன்
5. கௌரவ உறுப்பினர் சுபத்திரா ஜெயசீலன்
6. கௌரவ உறுப்பினர் சசிகலாதேவி ரவி
7. கௌரவ உறுப்பினர் நாகலிங்கம் இரத்தினபூபதி

மேற்படி உறுப்பினர்களை கலாசாரப்பண்பாட்டுக்குழு உறுப்பினர்களாக நியமிக்கலாம் என கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

❖ கௌரவ உறுப்பினர் பொன்னுத்துரை தங்கராசா அவர்கள் இக்குழுவின் முன்னேற்றம் தொடர்பாக தெரியப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

❖ கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் சபையின் நிலையியற்குழுக்களில் பெண் உறுப்பினர்களின் பங்களிப்பும் இருக்க வேண்டியது அவசியமாகும். அந்தவகையில் இவ்வாண்டுக்கான நிதி மற்றும் கொள்கை வகுத்தல் குழுவில் பெண் உறுப்பினர் ஒருவரை தெரிவு செய்ய வேண்டியது அவசியமாகும் எனத் தெரிவித்தார்.

இவ்விடயம் பரிசீலிக்கப்பட்டு பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மான இல: 10/21.04.2022**
கௌரவ உறுப்பினர் சந்திரகுமார் ரஜனிதேவி அவர்களை நிதி மற்றும் கொள்கை வகுத்தல் குழு உறுப்பினராக நியமிக்கலாம் என கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் பசுபதி யோகராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

❖ கௌரவ உறுப்பினர் பொன்னம்பலம் ஆதவன் அவர்கள் காலை 10.43 மணிக்கு கௌரவ தவிசாளரின் அனுமதியினைப் பெற்று கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

➢ அடுத்து 06.04.2022 ஆம் திகதி நடைபெற்ற தொழில்நுட்ப சேவைக் குழுக் கூட்ட அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
  ○ கௌரவ உறுப்பினர் பாக்கியநாதர் மரியதாஸ் அவாகள் தெரிவு செய்யப்பட்டார்.

❖ கௌரவ தவிசாளர் அவர்கள் தற்போது நாட்டில் மூலப்பொருட்களின் விலை அதிகரித்துள்ளமையால் பழைய மதிப்பீட்டில் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் சிக்கலான நிலை காணப்படுகின்றது. எனினும் மக்களுக்கான அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். அந்த வகையில் 3Mn திட்டத்தில் 05 வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளது. சில கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான வீதி விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.
❖ கௌரவ உறுப்பினர் இராசரத்தினம் ஸ்ரீதாமோதரராராசா அவர்கள் எனது வட்டாரத்தில் மக்கள் அதிகமாக பயன்படுத்தும் வீதிகளுக்கு வீதி விளக்குகள் பொருத்தப்பட வேண்டும் என்பதுடன் வீதிகளும் திருத்தம் செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
❖ கௌரவ உறுப்பினர் இராமன் சேனாதிராசா அவர்கள் மல்லாகம் மில் லேன் புனரமைப்பு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
❖ கௌரவ உறுப்பினர் சிவகுமாரன் செந்தூரன் அவர்கள் பொல்வத்தை பின் வீதி புனரமைப்பு செய்யப்பட வேண்டும். ஏறத்தாழ 15 குடும்பங்கள் இவ்வீதியை பயன்படுத்துவதுடன் மழைகாலங்களில் இவ்வீதியூடாக பயணிப்பது சிரமமாகும். அத்துடன் அன்னை வேளாங்கன்னி தேவாலயம் அமைந்துள்ள வீதி கனரக வாகனங்கள் அதிகளவில் பயணிப்பதால்

பழுதடைந்துள்ளது. இது தொடர்பாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

- ❖ கௌரவ உறுப்பினர் அனுஷாவதி இதயதாஸ் அவர்கள் எனது வட்டாரத்திலும் பழுதடைந்துள்ள வீதிகள் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் வீதி விளக்குகளும் பொருத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

  - அடுத்து 2022 ஆம் ஆண்டுக்கான மார்ச் மாதத்திற்கான கணக்கறிக்கை கௌரவ தவிசாளர் அவர்களால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்கான கணக்கறிக்கை சரியென கௌரவ உறுப்பினர் செல்லத்துரை கமலநாதன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் செல்வகுமாரன் விஜயராஜ் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- ➢ அடுத்து ஏனைய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

  - ❖ கௌரவ உறுப்பினர் நாகலிங்கம் இரத்தினபூபதி அவர்கள் எனது வட்டாரத்தில் சபைநிதி மூலம் 07 வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. இதற்கு கௌரவ தவிசாளர் அவர்களுக்கும் சபைக்கும் நன்றி எனத் தெரிவித்தார்.
  - ❖ கௌரவ உறுப்பினர் கந்தசாமி மயூரதன் அவர்கள் வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பிரதேசங்களில் இடம்பெறும் செயற்பாடுகள் தொடர்பாக சபையின் கௌரவ உறுப்பினர்களுடன் இணைந்து செயற்படுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
  - ❖ கௌரவ உறுப்பினர் கைலைவாசன் சீதாராமன் அவர்கள் வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்து ஒழுங்குபடுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.
  - ❖ கௌரவ உறுப்பினர் மார்க்கண்டு மகாதேவா அவர்கள் கட்டுவன்புலம் வீதி செப்பனிடப்படவில்லை. காணிகளுக்கு மதில் அமைத்துள்ள போதும் வேலி நீக்கப்படவில்லை. மக்கள் இவ்வீதியூடாக பயணிப்பதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
  - ❖ கௌரவ தவிசாளர் அவர்கள் இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.
  - ❖ கௌரவ உறுப்பினர் மரியதாசன் ஜோசெப் இதயராஜ் அவர்கள் கும்பலையில் உள்ள சபையின் பொது மண்டபத்திற்கு வேலி இல்லாமையால் பாதுகாப்பற்ற நிலை காணப்படுகின்றது. இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
  - ❖ கௌரவ உறுப்பினர் சண்முகவடிவேல் செல்லகாந்தன் அவர்கள் சபையினால் மேற்கொள்ளப்படும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளின் போது பற்றையாக உள்ள காணிகளுக்கு Red Notice ஒட்டுவதற்கு மதில், வேலி இல்லாமையால் இதற்கான ஒழுங்கு மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.
  - ❖ கௌரவ உறுப்பினர் எட்மன் தயாவதி அவர்கள் தமது வட்டாரங்களில் உள்ள வாழ்வாதார உதவி தேவைப்படும் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், போசணைக் குறைவால் அடிப்படை கல்வி பெறுவதில் கவனமற்ற சிறுவர்களின் பெயர் விபரங்களினை வழங்குமாறு கௌரவ உறுப்பினர்களை கேட்டுக் கொண்டார்.

இத்துடன் கூட்டமானது காலை 10.59 மணிக்கு இனிதே நிறைவு பெற்றது.

| | |
|---|---|
| ஒப்பம்: சு.சுதர்ஜன் | ஒப்பம்: சோ.சுகிர்தன் |
| செயலாளர், | தவிசாளர், |
| வலிகாமம் வடக்கு பிரதேச சபை, | வலிகாமம் வடக்கு பிரதேச சபை, |
| காங்கேசன்துறை. | காங்கேசன்துறை. |

உண்மைப்பிரதியென உறுதிப்படுத்துகின்றேன்.

திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்,
செயலாளர்,